DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE FAST TRACK COURT (M.L)
UTHAMAPALAYAM

Case No. CC.No.286/ 2023
Deposition of PW4/ LW8

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பாலசுப்ரமணியன் |
| Father's Name | : | பாண்டியன் |
| Village | : | தேனி |
| Taluk | : | தேனி |
| Calling | : | சார்பாய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27 day of May 2024
எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை.

அரசு தரப்பு முதல் விசாரணை

1. நான் தற்போது பழனிசெட்டிபட்டி காவல்நிலையத்தில் சார்பாய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.03.2022 ஆம் தேதி 20.00 மணிக்கு கூடலூர் வடக்கு காவல்நிலைய சார்பாய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது நிலையத்தில் ஆஜராகி நல்லமைதீன் மகன் இப்ராஹீம் என்பவர் கொடுத்த புகார் பெற்று பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.67/2022 இ.த.ச பிரிவுகள் 294(பி), 387 ன் படி வழக்கு பதிவு செய்தேன். **புகார் மனு அ.சா.ஆ.4 ஆகும். முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.** பின்னர் வாதியின் அசல் புகாரையும், முதல்தகவலறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

2. வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே 21.15 மணிக்கு சம்பவ இடமான கூடலூர் மெயின் பஜார் பள்ளிவாசல் தெருவி7 ல் உள்ள இப்ராஹீம் கடை முன்பு சென்று சாட்சிகள் சாகுல் ஹாமீது, நல்ல மைதீன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.6 மற்றும் 7 ஆகும்.** பின்னர் சாட்சிகள் இப்ராஹீம், பைசூர் ராகுமான், தமீன் அன்சாரி, சாகுல் ஹமீது, நல்லமைதீன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

3. வழக்கின் எதிரி சரவணன் என்பவரை 07.03.2022ம் தேதி 10.15 மணிக்கு கூடலூர் முனிசாமி கோவில் வைத்து கைது செய்து விசாரணை செய்தபோது எதிரி எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோலின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முகமது அபித், சாமாமுல் ஹக் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 27.05 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி ஒன்றை அதே சாட்சிகள் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆகும்.** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை படிவம் 91 மூலமும், எதிரியையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகும்.** பின்னர் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்குவிசாரணை</u>

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 –னிடம் எழுதப்படாத வெற்றுதாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு புகார் மற்றும் வழக்கின் மற்ற ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

Sd/-Thiru.P.Ramesh
Judicial Magistrate, Fast Track Court (M.L)
Uthamapalayam